**கவனிக்க.-** *2019.08.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2136 - 2019 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2019.08.09

*2136 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | தென் மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | வட மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| வட மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 180 |
| சப்பிரகமுவ மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 180 |


**கவனிக்க.-** (i) சேர் பெறுமதி வரி (திருத்தும்) சட்டமூலம் 2019, யூலை 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2019, யூலை 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒகத்து மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


179- B 81549 - 353 (2019/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தின் நியாகம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ரீ. ஜீ. டீ. நிலங்கி டயஸ் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996.08.27 ஆந் திகதி கையளிக்கப்பட்ட இலக்கம் 2/கா/13/கை/45395 மற்றும் எல். எல். 11580 ஆம் இலக்கம் கொண்ட பிரதான பத்திரத்தின் உரிமையாளரான கொடாமுனயில் வசிக்கின்ற புத்விட்ட லேகம்லாகே கருணாவதீ என்பவருக்கு கையளிக்கப்பட்ட பலபிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 1254 இன் கீழ் 1997.06.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் காணப்படும் அட்டவணையில் காணப்படுகின்ற காணிக்கு வாரிசுகளாக சட்ட ரீதியான ஓர் உரிமையாளர் இல்லாமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தும் அவர் வாரிசாவதற்கு விரும்பாத காரணத்தால் வாரிசாக எவரேனும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளதால் அதன் கொடுப்பனவுப் பத்திரம் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இத்தால் மூலம் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் காணப்படின் அதனை 2019.08.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு அறியத்தரவும்.

### அட்டவணை

காலி நிருவாக மாவட்டத்தின், நியாகம பிரதேச செயலாளர் பிரிவின் பெந்தர வளல்லாவிட்ட (தெற்கு) கோரளே 33ஏ கொடாமுண தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கொடாமுண எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அ. க. பி. 598 ஆம் இலக்கம் கொண்ட கட்டி உடைக்கும் நிலத் துண்டில் காட்டப்பட்டுள்ள நபராகவும், அளவில் 03 றூட் 23 பேர்ச் விஸ்தீரணமுள்ள கீழ் காணப்படும் எல்லைகளைக் கொண்ட அரச காணி ; வள்விலகந்த:

வடக்கு : குருபார ;
கிழக்கு : தியோனிஸ் என்பவரின் குத்தகைக் காணி ;
தெற்கு : அர்னோல்ட் என்பவரின் காணி ;
மேற்கு : பிரேமா என்பவரின் குத்தகைக் காணி.

ரீ. ஜீ. டீ. நிலங்கி டயஸ்,
பிரதேச செயலாளர்,
நியாகம.

2019, ஏப்பிறல் 29.

08- 298

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/29270.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : சிபிசி/எல்சி/எல்டி/4/1/28/106.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தம்பவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்f. வி. பி. 90 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 230/ 471 இன் ஒரு பகுதி எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 00 ஏக்கர் 02 றூட் 00 பேச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை பயிர்ச்செய்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. ரத்னபாகு முதியன்சேலாகே கெதர செனவிரத்ன என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : பி. எம். களுபண்டா என்பவரின் காணி மற்றும் பாதை;
கிழக்கு : கே. பி. கிரிஹொாதா என்பவரின் காணி ;
தெற்கு : கே. பி. திசாநாயக்க என்பவரின் காணி ;
மேற்கு : மாகல் பொத்த குன்றுக்கான ஒதுக்கு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி)

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் நான்கு வீதம்

வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்ச்செய்கை நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

பி. டி. ஐ. எல். விஜேகுணவர்தன,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
இல. 07, கிறகறிஸ் எவனியூ,
கொழும்பு - 07,
2019, ஓகத்து 09.

08-299